ஆகாயம் அறியாத இருவான வில்கள்
அவதாரம் செய்யாத கரு மின்னல்கள் 2
நிலவுபூக்கும் கடலின் மேனி
அழகுகொண்டு தாலாட்டும்
ஊர்கள் கூடும் இரவு நேரம்
கனவுகள் சுமந்து படகோடும்

நீட்டு நிமிர்ந்து நில வொளி குளித்து
எத்தனை நாட்கள் துயின்றீர்கள்
கூட்டில் அடைந்த குஞ்சுகள் போல
ஆணியத்தின் ஓரம் விழித்திர்கள்
உயிர்களினாலே ஏற்றிய தீபம்
ஒளியுடன் இங்கு எரிகின்றது
கருவறை பொல கடல் மடி உங்கள்
நினைவுகள் ஓடு அசைகின்றது

ஆகாயம் அறியாத இருவான வில்கள்
அவதாரம் செய்யாத கரு மின்னல்கள்

வசந்தத்தில் ஆடும் இளமையின் காலம்
இலக்குகள் தேடி தினம் கரையும்
கரைகளின் மீதும் எழுதிய சோகம்
வெடிகளின் ஏகத்தில் உருக்குலையும்
இதயத்தின் ஈரம் எதிர்ப்புகள் ஆகும்
திருமலை எங்கே அதிர்கின்றது
எம் விழிகளின் மீதும் கடலென வாகும்
நினைவுகள் எம்மை தொழுகின்றது

ஆகாயம் அறியாத இருவான வில்கள்
அவதாரம் செய்யாத கரு மின்னல்கள் 2
நிலவுபூக்கும் கடலின் மேனி
அழகுகொண்டு தாலாட்டும்
ஊர்கள் கூடும் இரவு நேரம்
கனவுகள் சுமந்து படகோடும்

ஆகாயம் அறியாத இருவான வில்கள்
அவதாரம் செய்யாத கரு மின்னல்கள் 2